**M.C.O.P. No.1226/2022**
**P.W.1 திருமதி.சத்யா**
**Date : 28.03.2025.**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

எனக்கு விபத்து எப்படி நடந்தது என்று நேரடியாக தெரியாது. விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. என் கணவர் எலக்ட்ரிசியன், பிளம்பிங் கான்ட்ராக்ட் எடுத்து மாதம் ரூ.30,000/- வரை சம்பாதித்து வந்தார் என்று ம.சா.ஆ.15 பொய்யாக தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்கின் மாதிரி வரைபடத்தை பார்க்கும் போது என்னுடைய கணவருடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது என்றால் சரியல்ல. என் கணவர் கட்டுமான தொழில் சங்கத்தில் உறுப்பினராக இருப்பதாக பொய்யான ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அளித்துள்ள வாரிசு சான்றிதழின்படி 4வது மனுதாரர் வாரிசாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். எனவே 4ம் மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை -</u>** இல்லை.